ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2316/07 - 2023 ජනවාරි මස 23 වැනි සඳුදා - 2023.01.23
*2316/07 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடக்கு மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2(1)(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 326 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2(1)(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 326 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.

**ஜீவன் தியாகராஜா,**
ஆளுநர்,
வடக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
வடக்கு மாகாணம்,
2023, சனவரி 21.

1A - PG 6184— 07 (2023/01)
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்குரிய வரவுசெலவுத்திட்டம் 2022.12.31 ஆம் திகதி வரை நிறைவேற்றப்படாமையால், 2023.01.20 ஆம் திகதி முதல் பதினான்கு நாட்கள் அல்லது 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படும் திகதி, இவற்றில் எது முன்னராக நிகழ்கின்றதோ அத்திகதி வரை யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வருக்கு 2023 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவின மதிப்பீட்டின்படியான பின்வரும் செலவுகளை மட்டும் மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தை வழங்குகின்றேன்.

1. சம்பளங்களும் படிகளும்
2. பயணப்படிகள்
3. வழங்கு பொருட்களும் தேவைப் பொருட்களும்
4. ஏற்றியிறக்கல் தொலைத்தொடர்பு மற்றும் பயன்பாட்டுச் சேவைகள்
5. பழுதுபார்த்தலும் பராமரித்தலும்
6. வட்டிக் கொடுப்பனவு
7. சபை ஓய்வூதிய கொடுப்பனவு
8. இலங்கை வங்கி லீசிங்

EOG 01 - 0227

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.